# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001
தொலை பேசி : **044-25358718, 9444058718, 9677048718**
மின்அஞ்சல் : **ubeutn@gmail.com**


சுற்றறிக்கை எண்:101:2016 05.01.2016

அன்பார்ந்த தோழர்களே !

## அகில இந்திய வேலைநிறுத்தம் - 08.01.2016

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் விடுத்த அறைகூவலின் அடிப்படையில், பாரத ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளான, ஸ்டேட் பாங்க் ஆப் பிகானிர் அண்டு ஜெய்பூர், ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத், ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர், ஸ்டேட் பாங்க் ஆப் பாட்டியாலா, ஸ்டேட் பாங்க் ஆப் திருவாங்கூர் ஆகிய வங்கிகளில் கடந்த ஆண்டு ஜூன் 4ஆம் நாள் வேலைநிறுத்தம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பல போராட்டங்கள், வேலைநிறுத்தத்திற்குப்பின்னும், அவர்களது நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை.

பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர் தான் அனைத்து துணை வங்கிகளுக்கும் தலைவர் என்ற முறையில், பாரத ஸ்டேட் வங்கி தனது நலனுக்காக, துணை வங்கிகளையும் அடிமைகளாக நடத்தி வருகிறது. துணை வங்கிகளும், அவற்றின் பணியாளர்களும் இரண்டாம்தர குடிமக்களாக நடத்தப்பட்டுவருகின்றனர்.

துணை வங்கிகள் 10வது இருதரப்பு ஒப்பந்தத்தின் கீழ் வரக்கூடிய வங்கிகளாகும். அவைகளுக்கு தனியான நிர்வாகங்களும், தொழிற்சங்கங்களும் இருந்தபோதிலும் அவர்கள் தன்னிச்சையாக செயல்படமுடியாமல் பாரத ஸ்டேட் வங்கி அவர்களை முடக்கிவருகிறது.

மிக முக்கியமாக, சமீபத்தில் பாரத ஸ்டேட் வங்கியின் நிர்வாகம் அதன் தொழிற்சங்கத்துடன் செய்துகொண்ட ஊழியர் விரோத ஒப்பந்தத்தை துணை வங்கிகளைச் சார்ந்த ஊழியர்கள் மீது திணிக்க எடுக்கப்பட்ட முயற்சி மிகப்பெரிய எதிர்விளைவை ஏற்படுத்தியுள்ளது.

பணி உயர்வு ஒப்பந்தம் (Career Progression Scheme - CPS) என்ற பெயரில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் பாரத ஸ்டேட் வங்கி ஊழியர் சங்கத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, புதிதாக துணைநிலை ஊழியர்கள் யாரும் நியமிக்கப்படமாட்டார்கள், இருதரப்பு ஒப்பந்தத்திற்கு அதிகமாக ஊழியர்கள் காசோலைகளை (Higher Autherisation) ஏற்கவேண்டும், இருதரப்பு ஒப்பந்தத்திற்கு அதிகமான தூரத்திற்கு இடமாற்றல்கள் வழங்கப்படும், நாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் அதிகமாக வேலை செய்யவேண்டும் என்றும் இதற்காக ஒரு தொகை ஊழியர்களுக்கு அலவன்சாக வழங்கப்படும்.

ஊழியர்களின் ஊதியம், பணிவரன்முறைகள் குறித்து தொழிற்சங்கங்களுடன் பேசுவதைத் தவிர்த்து, பாரத ஸ்டேட் வங்கி ஊழியர் சங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை துணை வங்கி ஊழியர்கள் ஏற்கவேண்டும் என்று துணை வங்கிகளின் நிர்வாகங்கள் ஊழியர்களைக் கட்டாயப்படுத்திவருகின்றன.

ஒப்பந்தத்திலுள்ள பாதகமான அம்சங்களின் காரணமாகவும், தங்களது ஊதியம், பணிவரன்முறைகளைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ளவேண்டும் என்ற காரணத்தினாலும், துணைவங்கி ஊழியர்கள் ஒப்பந்தத்தை முழுமையாக நிராகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இன்றைக்கு பாரத ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலை ஏற்கப்பட்டால், நாளை அனைத்து வங்கிகளிலும் இத்தகைய நிலை ஏற்படலாம் என்பதை நமது தோழர்கள் உணர்வது அவசியம். எனவே, நமது தொழிற்சங்க உரிமைகளைக் காத்திட இந்த வேலைநிறுத்தமும், அதன் மூலம் தெரிவிக்கப்படும் உணர்வுகளும், பாரத ஸ்டேட் வங்கியின் போக்கிலும், அரசின் போக்கிலும் மாற்றத்தை கொண்டுவரும்.

துணை வங்கிகளில் இன்றுவரை வெள்ள நிவாரணக்கடன் வழங்கப்படவில்லை. பிற வங்கிகளிலுள்ளது போன்று, வீட்டுவசதிக்கடன் உயர்த்தப்படவில்லை. இன்று வரை கருணை அடிப்படையில் வங்கிப்பணி வழங்குவது அமல் படுத்தப்படவில்லை.

**இந்த வேலைநிறுத்தத்திற்கான முக்கியமான கோரிக்கைகள் வருமாறு :-**

- பாரத ஸ்டேட் வங்கியின் துணை வங்கிகளை பாரத ஸ்டேட் வங்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கவேண்டும்
- அந்த வங்கிகளில் தொழிற்சங்க உரிமைகள் தடுக்கப்படக்கூடாது
- ஸ்டேட் பாங்க் ஆப் பிகானிர் அண்டு ஜெய்பூர் வங்கியில் தொழிற்சங்கத்தின் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும்
- பிற வங்கிகளைப் போல கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும்
- வீட்டு வசதிக்கடன் அதிகரிக்கப்படவேண்டும்
- துணைநிலை ஊழியர்கள் நியமிக்கப்படவேண்டும்
- நிலுவையிலுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும்
- பாரத ஸ்டேட் வங்கியின் பணிவரன்முறைகள், பதவிஉயர்வுக் கொள்கைகளை துணை வங்கிகளில் நடைமுறைப்படுத்துவதை எதிர்ப்பது.

வேலைநிறுத்தத்திற்குப் பின் பல சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்றும், நிர்வாகம் பிரச்சனைகளைத் தீர்க்க முன்வரவில்லை. எனவே, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம், அனைத்து வங்கி ஊழியர்களையும் இணைத்து போராட்டம் நடத்திட முடிவு செய்து அதற்கான அறைகூவலை விடுத்துள்ளது.

நமது தோழர்கள் அனைவரும், வழக்கம்போல, உணர்வுப்பூர்வமாக வரும் ஜனவரி 8 வேலைநிறுத்தத்திலும், அது தொடர்பாக நடைபெறவுள்ள பேரணிகள், ஆர்ப்பாட்டங்களிலும் கலந்துகொண்டு, யூனியன் வங்கியில் இந்த வேலைநிறுத்தத்தை முழுமையாக வெற்றிபெறச்செய்திட வேண்டுகிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**